2
2/1-65

சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்

SCRUTINY OFFICER
5 - JAN
INFORMATION AND PUBLICITY
R 808
4/1

மாயூரம் முன்சீப்
ச. வேதநாயகம் பிள்ளை
அவர்கள் இயற்றியது

MADRAS RECORD OFFICE
MADRAS

பதிப்பாளர்.
ாலகிருஷ்ண முதலியார்
1964 [ந. பை. 50

இ:4146
N64
11.3099

சிவமயம்

சர்வசமயசமரசக் கீர்த்தனைகள்

மாயூரம் முன்சீப்

ச. வேதநாயகம் பிள்ளை அவர்கள்

இயற்றியது

பதிப்பாளர்:

T. R. பாலகிருஷ்ண முதலியார்

அவர்களது

கலைமகள் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1964 [ந. பை. 50

கலைமகள் அச்சகம்
காலடிப்பேட்டை
சென்னை 19

உ

கடவுள் துணை

சர்வ சமய சமரசக் கீர்த்தனை

இராகம்–தேவகாந்தாரி, ஆதி தாளம்

பல்லவி

எக்காலமும் உந்தன் பொற்கால் பணிந்துகொண்
டிருக்கநீ வரம் அருள்வாய் எக்கா

அநுபல்லவி

தக்கோர் அபிமான ஞான சீலா
சகல புவன ரக்ஷ காநு கூலா எக்கா

சரணங்கள்

1. சந்த மேவுபிர பந்தமாலைபாடி
கந்தமார் உன் அரவிந்தபாதம்சூடி
வந்த ஞதிகள் அநந்தமே சொல்லி
விழுந்து பூமியில் எழுந்து நைந்துருகி எக்கா

2. துங்க சாதுஜன சங்கமோடு கூடி
பொங்கும் ஞான அக ளங்கவாரி ஆடி
அங்கமே பரவ சங்கொளப்பல
தங்களோடு சுப மங்களங்கள் சொல்லி எக்கா

3. பழுதிலாது தினம் முழுதும் உன்னைநாடி
தொழுது நேசமுடன் அழுதுபாடி ஆடி
ஒழுகு செந்தழலின் மெழுகுபோல மனம்
இளகியே அதிக புளகிதாங்க முடன் எக்கா

4. பூதலம் பரவு பாதவேத நாதா
சாதகம் செய்யும் அபேதநீத தாதா
போத நாயகனே பூத நாயகனே
கீத நாயகனே வேத நாயகனே எக்கா

இராகம்-துசாவந்தி, ஆதி தாளம்

பல்லவி

ஓடி நான் உனைத் தேடி வந்தேன்—எனக்
குதவி செய்தருள் ஐயனே. ஓடி

அநுபல்லவி

நாடி உன்பதம் தொட்டேன்
கோடி தரம் கும்பிட்டேன்
நாத விநோத பிரசாத பிரபோத
அபேத அதீத நிர்வாத கியாதனே ஓடி

சரணங்கள்

1. அற்பமான பதார்த்தம்—சற்றும் விரும்பேன்
ஐயா இது யதார்த்தம்
அற்புத பரமார்த்தம்—கொடுத்தருளில்
அதுவே உபயோகார்த்தம்
பற்பல விசித்திரனே
கற்பனு சமுத்திரனே
பாச விநாச சுரேச நரேச
பிரகாச விகாச உலாச விலாசனே ஓடி

2. வந்துனையே அடுத்தேன்—கீர்த்தனமாலை
வகை வகை நான் தொடுத்தேன்
வந்தனம் கைகொடுத்தேன்—நீ வசிக்க என்
மனக் கோயிலுங் கொடுத்தேன்
அந்தமனை உனக்கே
உந்தன்மனை எனக்கே
ஆய விதேயர்கள் நேயசகாய
அகாய உபாய நியாய விதாயனே ஓடி

3. அன்பர் உபாசனனே—பூதலந்தன்னில்
அதர்ம விமோசனனே
இன்ப நிவேசனனே—வேதநாயகன்
இதய சிம்மாசனனே
என் பாவங்களைத் தீர்ப்பாய்
உன் பதந் தன்னிற் சேர்ப்பாய்
ஏக அனேக திரிலோக நிர்வாக
தெய்வீக விவேக அமோக தியாகனே ஓடி

இராகம் அசாவேரி ஆதி தாளம்

பல்லவி

உன்னிடத்திற்சொல்லாமல் யாரிடத்திற்சொல்லுவேன்
ஓ ஓ ஜகதீசா உன்னி

அநுபல்லவி

பொன்னிடத்தாசையது புனிதர்கள் தமக்கின்பம்
பொழிதருவே இந்தப்புவியில் நான்படுந்துன்பம் உன்னி

சரணங்கள்

1. வயிறுபசிக்கும்பிள்ளை மாதாயிடம்போமன்றி
மற்றவரிடத்திற் சேருமோ—நாளும்
அயர்வுறும்பெரும்பிணி அருமருந்தாலன்றி
அயலொன்றினலே அதுதீருமோ—கன
வெயிலால் வருந்துவோரே
வேண்டுவர் நிழல்தீரே
உயிர்ப்பயி ரோம்புங்காரே
உனையன்றிக் கதியாரே
உலைவுறுசல்லடை போற்பலஓட்டை
உளதாகியவெறும் புழுமலக்கூட்டை
நிலயெனமனக்கவி செயும்பலசேட்டை
நித்தியம் நான் அதனுற்படும்பாட்டை உன்னி

2. நாதனேநான்பிழை யாதுசெய்யினும் நின்னை
நம்பினேன் என்மேலின்னம் க்ஷாத்ரமா-பாரில்
ஓதரும்புலச்சத்து ராதியர்க் கையிலென்னை
ஒப்புவிக்குதல்தர்ம சாஸ்திரமா—மறு
மாதர்மேற் செல்லும்நேத்திரம்
வாயே அபத்தபாத்திரம்
தீதுறைகொள்ளுஞ் சுரோத்திரம்
சிற்றின்பம்வேண்டுங் காத்திரம்
தீய அவயங்கள் செயுந்தினமோசம்
சிந்தையிற்குடிகொண்ட தாசாபாசம்
நாயேன்செய் கைகளே ஆபாசம்
நாற்பக்கத்திலும் நான்படுங்கிலேசம் உன்னி

3. எத்தனைசுமைபாவம் வேண்டுமானாலுமுந்தி
எனக்குக்கொடுக்கலாம் அச்சாரமே—எந்தன்
அத்தனேநானுன்சேயென் றறிந்தும்நோய்செயுமாயைக்
கார்தந்தார்இந்த அதிகாரமே – சர்வ
உத்தமஞ்சேர் நிர்தோஷ
உன்னதமா விசேஷ
பத்தர்நித்திய சந்தோஷ
பரசமயத் துவேஷ
பாக்கியமலர்ந்தருள் பழுக்கும் உத்தியான
பலவுயிராத்மகோ டிகள்அபிமான
ஆக்கியவேத நாயகன்ஸ்வாதீன
அன்னைதந்தைகுரு தெய்வஞ் சகலமுமான உன்னி

இராகம் பூரணகௌளை ஏக தாளம்

பல்லவி

என்பிழைகள் பொறுத்தாள்வாய் எனை—அலைக்கும்
துன்பவினை அறுத்தாள்வாய் என்

அநுபல்லவி

முன்பரவியே ஜெபிக்கும்
அன்பர்கள் அனுபவிக்கும்
இன்பமே அவர்விரும்பும்
நின்பத கமலம் நம்பும் என்

சரணங்கள்

1. நேயனைப்போல் விவகரிப்பேன்—துதிகவிகள்
ஆயிரம் உண்டாக்கி விரிப்பேன்—என்செய்கையெல்லாம்
வாயின் அன்பலாதுமனந் தோயும் அன்புளதோசிறு
நாயின் அன்புமேயில்லாமல் தீயவம்பனுய்த்திரியும் என்

2. எண்ணவொண்ணுமோ என்பவமே-ஐயனே இந்த
மண்ணினில் என்ஜன்மம் அவமே-தினந்தினமும்
உண்ணலும் நித்திரை தனே-நண்ணலுப்பெரும்பாவங்கள்
பண்ணலும் அல்லாதுன்பதம்-என்னல்செய்தறியேன்
[ஸ்வாமி

3. போதகம் என்னிடம் லயமே என்மனம்பஞ்ச
பாதங்கட் காலயமே—புவனமிசை
மாதவம் புரிபவர்க்குக்—கோதகலும் இகபர
சாதகங் கொடுத்தருளும்-வேதநாயகா இரங்கி என்

இராகம்-மோகனம். திரிபுடை தாளம்

பல்லவி

காக்ஷி எனக்குக் கொடாமலிருக்கிற
காரணம் ஏதையா காக்ஷி

அநுபல்லவி

சாக்ஷியாய் நிற்கும் சர்வாதிகாரனே
மாக்ஷியுடையோர் மகிழ்நிர்விகாரனே காக்ஷி

சரணங்கள்

1. அந்தரங்கபத்தி அற்றவனென்றே
அக்கிரமத்தில்பெயர் பெற்றவனென்றே
பந்தப் பேய்க்குள்ளதை விற்றவனென்றே
பாதகங்களெல்லாங் கற்றவனென்றே காக்ஷி

2. மறந்தும் ஒருமெய்சொல் லாதவனென்றே
மருந்துக்கும் நன்மையில் லாதவனென்றே
சிறந்தமெய்ஞ் ஞானங்கல் லாதவனென்றே
தேசத்தார்க்கெல்லாம்பொல் லாதவனென்றே [காக்ஷி

3. ஏசிமறையை இகழ்ந்தவனென்றே
ஈனமதத்தைப் புகழ்ந்தவனென்றே
நீசெய்நன்றி மறந்தவனென்றே
நீசர்க்குள்மெத்தச் சிறந்தவனென்றே காக்ஷி

4. ஆதிமத்தியாந்த ரஹிதமகேசா
அற்புத சின்மயா னந்தவிலாசா
வேதாந்த விதியுபதேசா
வேதநாயகன் இதயப்பிரகாசா காக்ஷி

இராகம்-தர்பார். திரிபுடை தாளம்

பல்லவி

என்னை ஆளையா—என் விண்ணப்பம்
தன்னைக் கேளையா என்னை

அநுபல்லவி

மின்னை நிகரும்வாழ்வை வெறுப்பவர்க்குரியோனே
அன்னைபிதாசற்குரு வாகியபெரியோனே

சரணங்கள்

1. அடியேன்மேற்சினமா—என்குறை நீக்கி
ஆள்வதி கனமா

கடினம் நின்மனமா—எனது நெஞ்சங்
கவலைக்கா சனமா
படியில் என்னகத்துறு பாவ இருளைமாற்றித்
திடமுறவே மெய்ஞ்ஞானத் தீபந்தனையேற்றி என்னை

2. என்றுஞ் சஞ்சலமா—ஐயனே மாயைக்
கிவ்வளவு பலமா
வென்றுகொள் புலமா—அதனால் ஏழை
மெலிவது நலமா
நன்றுருவாகிய நாதாஎன்முகம் நோக்கிக்
குன்றெனநான்செயுங்கொடுவினைகளைப்போக்கி என்னை

3. கைவிடலாமா—என்னிடம்வரக்
கால்மலர் நோமா
கைவினை போமா—இனிமைதங்கும்
நன்னய நாமா
தெய்வநாயகனுகித் திகழுறும் அகளங்கா
கைவல்லிய ஞானநெறி கமழ்மதுரப் பிரசங்கா என்னை

4. தித்திக்குந்தேனே—அமுதேகன
தேவர்கள் கோனே
எத்திக்குந்தானே—எள்ளுளெண்ணெய்போல்
இருக்குங்கோமானே
புத்தியுடையோர்சூட்டும்புகழ்மாலை அணிதேவனே
பத்தியுடனே வேத நாயகன் பணிவோனே என்னை

இராகம்-தேசிகதோடி, ஆதி தாளம்

பல்லவி

ஐயா யெனை ஆண்டருளே—உனை
அண்டினனே மனம்—வேண்டினனே ஐயா

அநுபல்லவி

பொய்யாம் வாழ்வினில் நான் குழையாமல்
போகாதிகளில் என்மனம் நுழையாமல் ஐயா

சரணங்கள்

1. ஒரு நிமிஷமு முனதடி மறவாமல்
உலகழியினு முன தருள் துறவாமல்
இருதய மதனிலோ ரிடர்பிற வாமல்
இழிவுறு பழியொடு நானிற வாமல் ஐயா

2. உன்னையலா தொரு வரையும் தொழாமல்
உதர நிமித்தம் எங்கும் ஓடியழாமல்
இந்நில மீது துராசை எழாமல்
இறந்தபின் ஞனெரி நரகில் விழாமல் ஐயா

3. நல்ல வழிதனை எந்நாளும் விடாமல்
நாட்டில் அசடனென நான் பேரெடாமல்
பல்வகை யாகிய பழிகள் தொடாமல்
பாவையர் மோகத்திற் படிந்து கெடாமல் ஐயா

4. என்னுயிர் போல எவ்வுயிரையும் பேண
இகசுக போகத்தை என்றுமே நாண
மின்னுங் குணபர ணந்தனைப் பூண
வேதநா யகனே நானுனைக் காண ஐயா

இராகம்-பியாக், ரூபக தாளம்

பல்லவி

இந்த நிமிஷமே பாபநிவர்த்தி
எனக்கருள்வாய் ஸ்வாமி இந்த

அனுபல்லவி

எந்த நிமிஷத்தில் சாவு வருமோவென்
றேங்கியே நான் பயந்தேனே—உயிர்
நீங்கிடி லென்ன செய்வேனே—சுரர்கோனே

சரணங்கள்

1 காலையோ மாலையோ நாளையோ சாவெனுங்
காலக் கணக்கறியேனே—வந்த
வேலை விடியுமுன் ஓலை யனுப்பிட
வேண்டாஞ்சொன்னேன்சிறியேனே—என்னை
ஆண்டாலுனைப்பிரியேனே—பெரியோனே ()

2 பொட்டென்று தேகந்தான் சட்டென்று வீழ்ந்
கிட்ட ஒருவர் நில்லாரே—குழி [திடில்
வெட்டென்பர் பிரேதத்தைச் சுட்டென்பர் மண்
[ணைமேற்
கொட்டென்பர் போவர் பொல்லாரே-ஆன்ம
நட்டம் வராமற் கண்பாரே—துயர்தீரே இந்த

3 கப்பல் இல்லாமலே எப்படியேனும்
கடலைக் கடக்க வொண்ணாதே—நாளும்
அப்படி நின்பதத் தெப்பமில்லாக்கந்த
ஆனந்தவீடு நண்ணாதே—நல்ல
ஞானந் தருவாயிப்போதே—கைவிடாதே இந்த

4. ஆதிமத்தியாந்த ரகிதப் பிரபோத
அபேத புராதன நாதா—நாளும்
காதலுடன் வேத நாயகனுள்ளக்
கமலந்தங்குந் திருப்பாதா—எனக்
கமலந்தர இன்னம்வாதா—கிடையாதா இந்த

இராகம்-புன்னாகவராளி, ஆதி தாளம்

பல்லவி

காக்கவேண்டும்-கடவுளே-நீ காக்கவேண்டும் காக்க

அநுபல்லவி

காக்கவேண்டும்-எனை அன்பன்-ஆக்கவேண்டும் என்கவலை
நீக்கவேண்டும்பாவமெலாம்-போக்கவேண்டும் தினமெனைக்
காக்க

சரணங்கள்

1. பண்ணியவினையுமனம்—எண்ணியவினையும்வாக்கில்
நண்ணியவினையுந்திரக்—கண்ணியவரந்தந்தென்னைக்
காக்க

2. ஆரணனேநீகொடுத்த—தாரணிச்செல்வத்தின்மனம்
பூரணமானேன்பவநி—வாரணசுகந்தென்னைக் காக்க

3. எந்தவேளைமரணமோ—அந்தவேளை வந்துன் அர
விந்தமலரேநிகருஞ்-சுந்தர அடிதந்தெனைக் காக்க

4. பூதமுதலானஜீவ—பேதகாரணனே நாளும்
வேதநாயகன் பணிபிரக்—கியாதபூரணனே எனைக்
காக்க

இராகம்-காமஸ், ரூபக தாளம்

பல்லவி

ஜாலஞ்செய்வ தேதோ ஐயா
சீலம் ஈயொண்ணுதோ மெய்யா ஜாலஞ்

அநுபல்லவி

ஞாலமெல்லாந் தாங்குங்கையா
நற்குணமில் லார்க்குவெய்யா ஜாலஞ்

சரணங்கள்

1. பெண்டுபிள்ளை யோடினமே
பேய்ச்சுரை படர்வனமே
அண்டும் இவரால்தினமே
ஐயையோ நொந்தேன்மனமே ஜாலஞ்

2. பாழுமனமே மற்கடகம்
பண்ணும் அகடவிகடம்
ஊழ்வினை தரும்சங்கடம்
ஒழித்துநீ யருள்வாய்திடம் ஜாலஞ்

3. நீதிவழுவாத செங்கோலா
நித்திய சங்கீதலோலா
வேதியர் பரவுஞ்சீலா
வேதநாயகன் சேர்காலா ஜாலஞ்

காலை ஸ்தோத்திரம்

இராகம்-தேசிகதோடி ஆதி தாளம்

பல்லவி

உனக்கே—நமஸ்காரமையா—இடர்
ஒன்றும்வராமலே நன்றுசெய்தாயே உனக்கே

அநுபல்லவி

தனக்கோர்நிகர் என்றுமிலாத
தயாகரனை பராபரனே உனக்கே

சரணங்கள்

1. நேத்திரங்களைநீயெம்—மாத்திரமூடாமற்
காத்திருந்தாயெனை-இராத்திரிமுழுதும் உனக்கே
2. சத்துருபயமின்றி—நித்திரைசெயவெனைப்
பத்திரமாயுன்கையில்வைத்திருந்தாயே உனக்கே
3. மூந்தும்அரவம்விஷ—ஜெந்துக்களால்அபாயம்
வந்துகெடாமலே-காபந்துசெய்தாயே உனக்கே
4. தீயும்வெள்ளமும்காற்றும்—பேயும்விலங்கும்பல
நோயும்வராமற்காத்தாய்—தாயுந்தந்தையும்போல
உனக்கே
5. நாங்களோர் தடையின்றித்—தூங்க இராமுழுதும்
வீங்கிருட்போர்வைதனைத்—தாங்கினின்றாயே உனக்கே
6. இருட்டுமாறிவிடியும்—பொருட்டுநீபுவிதனை
உருட்டி இராமுழுதும்—புரட்டினொந்தாயே உனக்கே

7. பூதநாயகனேபிர—போதநாயகனேசங்
கீதநாயகனே நல்—வேதநாயகனே உனக்கே

இதோபதேசக் கீர்த்தனைகள்

கடவுளை தியானிக்கும்படி வற்புறுத்துதல்

இராகம்-குந்தளவராளி, ஆதி தாளம்

பல்லவி

மனமேநீ—ஈசநாமத்தை வாழ்த்துவாய்—தினம்
வாழ்த்துவாய் மனமே

அநுபல்லவி

அனவரதமும்நீ அரும்பதம்பாடிக்
கனசுகமேவிடக் கலந்துகொண்டாடி மனமே

சரணங்கள்

1. வம்புவார்த்தை களேபெரும்பாபம்
வாய்க்குச்சேத மல்லால் என்னலாபம்
எம்பிரான் திரு மகிமைப் பிரதாபம்
எடுத்துப்பேசுவது சத்காலக்ஷேபம் மனமே

2. ஏகமாகஉள் ளுருகியேபரிய
இருகண்ணானந்த பாஷ்பங்கள் சொரிய
தேகபரவசம் தாயன்புவிரிய
சிரகாதிகள் அஞ்சலிபுரிய மனமே

3. கரும்புதின்னக்கை கூலியும்ளதோ
கற்கண்டோ அமுதோ பசுந்தேனோ
விரும்பும்பிரமானந்த மேயதுதானோ
வேதநாயகன்பேர்க்கிணைசொல்லநானோமனமே

இதுவும் அது

இராகம்-அடாணு, ஆதி தாளம்

பல்லவி

மனமேநீ மறவாதே—ஐயன்பதத்தை

அநுபல்லவி

கனவிலும்—நிதமுறு—கனவிலும்பலபல
நினைவிலும்—ஒழியாமல்—அனவரதமுமே மன

சரணங்கள்

1. மண்ணுஞ்சராசரமும் விண்ணும்படைத்தளித்து நீங்கும் பராபரன்தன்
வண்ணமலர்ப்பதத்தைக் காணும்பொழுதில் இன்பந்தேக்கும் ஆகையினாலே
உண்ணும் பொழுதும்வேலை-பண்ணும்பொழுதும்ஒன்றை
எண்ணும் பொழுதுந்துன்பம் நண்ணும்பொழுதுமே மன

2. கல்லும் பெருமரமும் புல்லும்புனலுமே சஞ்சாரம் செய்யு மந்திபோல்
தில்லும்புல்லும் திரியா வரமுஞ்செய்தென்ன சாரம் வெளியிலேதான்
செல்லும் பொழுதும்வார்த்தை-சொல்லும்பொழுதும்பகை
வெல்லும் பொழுதும்பின்னும்—அல்லும்பகலுமே மன

3. அஷ்டதிசையும்ஓடிக் கெட்டலைந்தோம்புவோம்சரீரம் இருப்பிடத்தை
விட்டகலாமல்தியான நிஷ்டைசெய்வதில் என்னபாரம் பலவியாதி
குஷ்டம்வந்தாலுந்துரைப்-பட்டம்வந்தாலுமே பெருங்
கஷ்டம்வந்தாலும்பிறர்—வெட்டவந்தாலுமே மன

4. கெடுக்கும்பலவினையை ஒடுக்கும்வேதநாயகநாமம் துயர்வராமல்

படுக்கும்இகபரமும் கொடுக்குந்தினமும்உண்டுக்ஷேமம் நித்திரைசெய்யப்
படுக்கும்பொழுதுந்துகில்-உடுக்கும்பொழுதும் ஒன்றைத்
தொடுக்கும் பொழுதும்சுகம்—அடுக்கும் பொழுதுமே மன

இதுவும் அது

இராகம்-கல்யாணி, ஆதி தாளம்

பல்லவி

இனியாகிலுமனமே-ஐயனை நீ-நினையாயோ தினமே
இகபரசித்திபெறவே இனி

அநுபல்லவி

தனியிளம் பருவமுந் தாண்டிப் போனதே
பனைபோல் வளர்ந்து கிழப் பருவ மானதே இனி

சரணங்கள்

1. ஆசைக்கொரு கறுப்பு மயிரேனும் இல்லையே
ஐயையோ கொக்குப்போல் நரைத்தது தலையே
காசுக்குதவாக் கிழமென்பது நிலையே
கன்னியர்க்கும் இனிநாம் கசக்தும்வேப்பிலையே இனி

2 கண்கள் இரண்டும் மூக்குக்கண்ணாடி தேடும்
காலூசலாடும் ஓர்கழியைக் கைநாடும்
தண்கொள்ளும் வேரற்றுத் தந்தங்கள் ஆடும்
தடுத்தாலும் நில்லாமல் யௌவனம் ஓடும் இனி

3. பசிவந்தபின் நெல்லை விதைப்பதும் மதியோ
படுந்தாகம் வந்தபின் வெட்டுதல் ததியோ
விஜயஞ்செய்திடச் சாகுங்காலமே ததியோ
வீணேயுனக்குக் கெட்டுபோகச் சம்மதியோ இனி

4. காலந்தனக் கென்னசெய்தோம் அபசாரம்
கனத்த ஆயுசை அநுதினஞ்செய்யும் சோரம்
மேலுமேலும் உடலில் விளைக்கும் விகாரம்
வேதநாயகன் சொல்லேவேதாந்தசாரம் இனி

துர்க்குணங்களை வெளியிடல்

இராகம்-எதுகுலகாம்போதி, ஆதி தாளம்

பல்லவி

நெஞ்சே இந்த நாடெங்குந்தேடினும்
நீசர் நமைப்போலுண்டோ நெஞ்சே

அநுபல்லவி

அஞ்சாமல்நாளும் அகந்தைகள்நீடுவோம்
சஞ்சலப்பேயால்தலைச்சுற்றிஆடுவோம் நெஞ்சே

சரணங்கள்

1. தேகம்உயிர்முதல் யாவையுமேதந்த
தேவன் தனை மறப்போம்—கரு
மேகநிழல்போல் மறையும்பொய்வாழ்வை
விரும்பி நலந் துறப்போம்
மோகவிகாரத்திலே தடுமாறுவோம் [வோம்
முன்னென்றும்பின்னென்றுமாகப்பொய்கூறு
ஏகமாய்எங்கும் பிறர்களைத்தூறுவோம்
எப்படிஐயையோ நாம்கரைஏறுவோம் நெஞ்சே

2. கோயில்குருக்கள் ஜெபதபம்யாவும்
கொடுவிஷம் போல்வெறுப்போம்—தினம்
நேயமதாகவே தூயமறைசொல்லும்
நீதிகளை மறுப்போம்
ஆயிரம்பாவம் அடிக்கடிபண்ணுவோம்
அன்னியமாதரை ஆசையாய்எண்ணுவோம்
ஈயாஉலோப குணத்தையேநண்ணுவோம்
ஏழைபசியோடிருக்கநாமுண்ணுவோம் நெஞ்சே

3. உள்ளபடிநமக் கெள்ளளவென்கிலும்
உத்தமம்தான் இலையே—பாவ

வெள்ளம்நிறைந்திடும் பள்ளந்தனிலே
விழுந்துகெட்டோம் நிலையே
வள்ளலைப்போல்வெறு மாயக்கூத்தாடுவோம்
வந்தஎளியர்க்கு வாசலைமூடுவோம்
உள்ளேபகையும் உதட்டன்பும்மீடுவோம்
ஊரை அடித்தேஉலையிலேபோடுவோம் நெஞ்சே

4. உற்றகலைஎல்லாம் கற்றமெய்ஞ்ஞானிபோல்
ஊரைமயக்கிடுவோம்—பழு
தற்றமெய்ஞ்ஞானத்தில் பற்றுதலின்றி
அலைய உடம்படுவோம்
மற்றவரைக்கெடுத்துப் பழிவாங்குவோம்
வாழ்வோரைக்கண்டால் வயிறுப்பிவீங்குவோம்
நற்றவம்செய்யாமல் நாளெல்லாம் தூங்குவோம்
நல்வேதநாயகன்பாதத்தைநீங்குவோம் நெஞ்சே

மனமயக்கந் தவிர்த்தல்

இராகம்-எதுகுலகாம்போதி. அடதாள சாப்பு

பல்லவி

நீ மலைக்காதே—நெஞ்சே—நீமலைக்காதே நீ

அநுபல்லவி

நேமத்துடன் ஐயன்—நாமத்தைபோற்றிடில்
க்ஷேமத்தைக் கொள்ளுவோம்-காமத்திலேசிக்கி

சரணங்கள்

1 மோகத்தையும்—அவிவேகத்தையும்தரும்
போகத்தையும்உத்தி—யோகத்தையும்நம்பி நீ

2 ஆட்டையும்மந்தையின்—மாட்டையும்கட்டிய
வீட்டையும்முன்கெட்ட—கேட்டையுமேஎண்ணி நீ

3 கிச்சுகிச்சென்றேடும்—மூச்சுபோனால்ஒரு
பேச்சுக்காகாமலப்—பீச்சுக்குழல்நம்பி நீமலே

4 நாட்டைக்கொள்ளையிடும்—வேட்டைக்காரன் நமன்
காட்டைக்கலைத்துயிர்—கூட்டைக்கொள்வான் ஐயோ [நீமலே

5 கேட்டைதருஞ்சோற்று—மூட்டைதனை ஒன்ப
தோட்டைப்பாண்டத்தைக்கற்—கோட்டையெனநம்பி [நீமலே

6 கொண்டையிலேரத்னத்—தண்டையிலேவிழிக்
கெண்டையிலேமதன்—சண்டையிலேசிக்கி நீமலே

7 சேலையென்றும்முத்து—மாலையென்றும்தினம்
வேலைகொள்ளும்பெண்கள்—காலைத்தழுவியே நீமலே

8 சொத்துதமக்கென்று—கத்துவதன்றி
ஆபத்துக்குதவாத—புத்திரரைநம்பி நீமலே

9 தாயகனைவேத நாயகனைவிட்டு
மாயவலைபட்டுத் தூயநெறிகெட்டு நீமலே

நற்புத்தி கூறல்

இராகம்-சுருட்டி, திரிபுடை. தாளம்

பல்லவி

போனதுபோகட்டும் நீஇனியாகிலும்
புத்தியாய்வாழ்மனமே போனது

அநுபல்லவி

ஞானமில்லாத நடக்கையைத்தொட்டாயே
நம்பினவென்னை நட்டாற்றில்கைவிட்டாயே போனது

சரணங்கள்

1 எத்தனைநாள் இருந்தாலும் ஒருநாள்
இறப்பதுசத்தியமே—அப்போ

தென்னவரும்புண்ணிய பாவம் அல்லாமல்மற்
றெல்லாம் அநித்தியமே
பித்தஉடம்பை வளர்த்திடச்செய்கிருய்
பிரேதவயித்தியமே—என்றும்
பேதமில்லாப்பரன் பாதம்பணிந்தோர்க்குப்
பேரின்பம் சாநித்தியமே
பக்தர்சங்கத்தைநீ நித்தம்பிரிந்தாயே
பங்கம்புரிந்தாயே—எங்குந்திரிந்தாயே   போனது

2 தன்றூரம்அன்றிப் பரதாரம்தாய்க்குச்
சமானம்இதுதேரே—கெட்ட
தாசியைக்கண்டால் நமஸ்காரஞ்செய்துநீ
தப்பவழிபாரே
இன்றுநாளையென்று நாள்போக்காமல்வினை
இக்ஷணமேதீரே—பின்னும்
எந்தவுயிரையும் சொந்தஉயிரென
எண்ணித்தயைகூரே
என்றும்பணப்பேய் தனைநீகும்பிட்டாயே
ஏச்சுக்குட்பட்டாயே-சீச்சீநீகெட்டாயே   போனது

3 நாதனைப்பேசிடும் நாவினல்அற்ப
நரஸ்துதிபாடாதே—நாளும்
நானென்னதென்றபி மானம்பிடித்துநீ
நாடெங்கும் ஓடாதே
சாதகபாதகம் என்னவந்தாலும்
தவம்விடக்கூடாதே-கோடி
தர்மம்உனக்குண்டு கர்மம்விளைக்கும்
தனத்தினைத்தேடாதே
போதவேதநாயகன் தாள்விடுத்தாயே
பொன்னை அடுத்தாயே-என்னைக்கெடுத்தாயே   போனது

இராகம்-கனகவசந்தம், ஆதி தாளம்

பல்லவி

பொருளைவிரும்பவேண்டாம்—மனமே
பொருளைவிரும்பவேண்டாம் பொ

அநுபல்லவி

ஒருவரிடமுநில்லா தூரெங்கும்பறக்கும்
திருவேதநாயகன் சேவடிதுறக்கும் பொ

சரணங்கள்

1 பணமுள்ளவர்க்குநமன் பயப்படுவானே
குணமுடன் அவர்மனைக் கும்பிடுவானே பொ

2 தனவான்களைத்துயர் சாரஅஞ்சிடுமோ
கனசுகம்அவருடன் கலந்துகொஞ்சிடுமோ பொ

3 பார்க்கவொட்டாமலே பார்வையைக்கெடுக்கும்
வார்த்தைசொல்லாமலே வாயையுந்தடுக்கும் பொ

4 மண்டலத்தில்நமக்கு வயிறொருகுதிரா
கண்டபடிஉண்ணநாம் கபந்தனுக்கெதிரா பொ

5 ஊரில்நம்மிருப்பிடம் ஒருமுழமட்டே
பாரிலேநமக்கேன் பலமனைக்கட்டே பொ

6 உலகில்வயிறுநமக் குள்ளதுசானே
மலைமலையாய்க்குவித்து வைக்குதல்வீணே பொ

7 சங்கையில்லாமல்பணந் தலைவெட்டும்ஒருவாள்
தங்கைவருவாள்பின்பு தமக்கையும்வருவாள் பொ

8 வித்தாரமாகப்பொருள் வேண்டுதல்தாழ்வு
செத்தால்தெரியுமே செட்டியார்வாழ்வு பொ

9 அவரருளுடன் ஏழைக்குதவாப்பணம்பிணமே
பொருள் அதைக்குருவெட்டிப் புதைக்குதல்குணமே பொ

10 பூதமானலும்உண்ணப் போதுமாகாணி
ஆதலால்நமக்கேன் ஆயிரங்காணி பொ
11 கெண்டைச்சேலைக்காரிதான் கிழவியாகாளோ
கொண்டைப்பூமுடித்திடும் குமரிசாகாளோ பொ
12 வெறுங்கழுத்தாயிருந்தால் விக்குமோதொண்டை
உறுந்தலை அணிபோனல் உடையுமோமண்டை பொ
13 கடுக்கன் இல்லாவிட்டால் காதுகேளாதே
உடுப்புகள் இல்லாவிட்டால்உடம்புநீளாதோபொ
14 கந்தல்அணிந்தவள் கர்ப்பம்ஆகாளோ
விந்தைநகையுள்ளவள் மெலிந்துபோகாளோ பொ
15 பொருந்தச்செலவிடாமல் புதைத்திடும்பணமே
இருந்தென்னபோயென்ன இதில்என்ன மனமே பொ
18 நிதிவெள்ளியாதிகள் நிச்சயம்மண்ணே
புதையல்தன்னினமென்றுபுசிப்பள்மண்பெண்ணேபொ

செல்வச் செருக்கு

இராகம்.தேவமனேகரி, ஏக தாளம்

பல்லவி

வீண் கர்வம் ஏன் மனமே—உனக்கு
வீண் கர்வம் ஏன் மனமே வீண்

அநுபல்லவி

காண்பொருள் சகலமும் கடவுள் ஆதீனம்
கனதொண்டமானுந் தோட்டியுமேசமானம்

சரணங்கள்

1 நம்முடன்பிறந்ததுண்டோ உத்தியோகம்
நமக்குமுன்னே அது பலர் அனுபோகம்
அம்மஅதற்குக்காத் திருப்பர் அநேகம்
அனைவர்க்கும்உண்டு ராஜீகதெய்வீகம் வீண்

2 தாசிகள்போல்செல்வம் பலருடன்கூடும்
தணமிகுந்தஇடத்தில் தரித்திரம்நாடும்
கூசாமல்யானையைக் கொசுகுமேசாடும்
குப்பைஉயர்ந்து கோபுரத்தையும்மூடும் வீண்

3 கனவில்கண்டங்கத்திரிக் காய்கறிக்காமோ
கல்லால்இரும்பால் காயங்கொண்டோமோ
தினம்அசையாமல்மண்ணில் வேர்கொண்டநாமோ
சினந்துநாம்சபித்திடில் திசையெல்லாம்வேமோ

4 தம்பொருளென்பர் மனைவியர்மைந்தர்போர்
தப்பினால்விடுவாரோ தாயாதிக்காரர்
வெம்பிச்சமயம்பார்த் திருப்பர்சோரர்
மிச்சத்தைசுருட்டுவார் மேல்அதிகாரர் வீண்

5 இடையில்கோவணமின்றிப் பிறந்தோமெய்யே
இறந்திடுங்காலத்தும் நாம்வெறுங்கையே
உடைமைநமதுசொந்தம் என்பதுபொய்யே
ஊரார்பொருளைநாம் சுமந்தோம்ஐயே வீண்

6 ஜெகமுழுதும் நமக்குச் சர்வமானியமா
சிந்தித்தகாரியம் எல்லாம்ஜயமா
சுகதுக்கபேதம் இல்லாதிவ்யமயமா
துஷ்டன் இயமனுக்குநமைக்கண்டால்பயமாவீண்

7 நீடுந்தங்கையும்தமக் கையும் அதிநேசம்
நிதமுங்கைமாறிக் கொள்வார் அவர்வாசம்
சூடுண்டமாடுபோல் துள்ளல்ஆபாசம்
துள்ளினமாடுபொதி சுமக்கும்பிரகாசம் வீண்

8 தாம்வயிற்றிலிருந்து ஜனித்திட்டபோது
சட்டைத்தலைப்பாகுடன் நாம்வந்ததேது
மாயப்பிரபஞ்சத்தின் வாழ்வெல்லாஞ்சூது
மாவேதநாயகனை மறக்கவொண்ணாது வீண்

உலக வாழ்வை வெறுத்தல்

இராகம்-இந்துஸ்தான்காப்பி ரூபக தாளம்

பல்லவி

வாழ்வைநம்பாதே—மனமே—வாழ்வைநம்பாதே

அநுபல்லவி

தாழ்வில்லாத நமதுஸ்வாமி
தாளைத்தேடு பாடுபூமி வாழ்வை

சரணங்கள்

1 தேகமாம்ஸ மூட்டை—பல
ஜெந்துவுக்கும்நல்ல வேட்டை—அதில்
ஓகோஅனந்தம் ஓட்டை—உயிர்
ஓடிடஎத்தனை பாட்டை—இந்த வாழ்வை

2 இன்றைக்காளுவார் நாடு—நாளை
எடுப்பார்கையிலே ஓடு—உடல்
ஒன்றுக்குதவாத கூடு—இதை
உற்றுப்பார்த்தால்வெட்கக்கேடு—புவி வாழ்வை

3 பெண்டுபிள்ளைக்கென்ன வாட்டம்—நம்மைப்
பிடுங்கித்தின்பதிலே நாட்டம்—கையில்
உண்டாகும்போது கொண்டாட்டம்—செல்வம்
ஓய்ந்தால்சகலமும் ஓட்டம்—புவி வாழ்வை

4 இந்தஉலகத்திற் பிறந்தார்—முன்னம்
எத்தனையோபேர்கள் இறந்தார்—பெற்ற
தந்தைதாய்பாட்டரும் பறந்தார்—நாலு]
தாரங்கள்போய்நம்மை மறந்தார்—புவிவாழ்வை

5 இன்றுபல்லக்கினிற் போவார்—நாளை
எடுக்கும்ஆள்களும் ஆவார்—நரர்
என்றவர்யாவருஞ் சாவார்—மதி
ஈனர்நரகத்தில் வேவார்—புவி வாழ்வை

6 கூத்தில் அரசனைப் போலே—வேஷம்
கொண்டவர்க்குண்டோசெங் கோலே—புவி
சாத்தியநாடக சாலை—அந்தச்
சாலையில்நாம்எந்த மூலை—புவி வாழ்வை

5 வண்டியும்ஓடத்திலேஏறும்—ஓடம்
வண்டியில்ஏறும் நாள்தோறும்—நாம்
கொண்டபொருள்கள் கைம்மாறும்—வேதம்
கூறுஞ்சொல்லே நிறைவேறும்—புவி வாழ்வை

8 எண்ணிக்கையில்லாமல் இங்கே—முன்னம்
இருந்தவரெல்லாம் எங்கே—நாமும்
நண்ணிப்போகவேண்டும் அங்கே—வேத
நாயகன்பாதம்நம் பங்கே—புவி வாழ்வை

உடலை வெறுத்தல்

இராகம்-இந்துஸ்தான்காப்பி, ரூபகதாளம்

பல்லவி

உடலைநம்பாதே—மனமே உடலை

அநுபல்லவி

குடலுந்தசையும் எலும்பும்நரம்பும்
கொழுத்துப்பழுத்துப் புழுத்துநிரம்பும் உடலை

சரணங்கள்

1. இந்திரியம்மல மூத்திரம்—தசை
இரத்தம்நிறைந்த பாத்திரம் பாச
பந்தப்பேய்வளர் க்ஷேத்திரம்—வெறும்
பவபந்தநாடக சூத்திரம்—இந்த உடலை

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 113099

2. ஆசைப்பக்ஷியின் கூடு—பல
அசுத்தஞ்சேர்குப்பை மேடு—இதை
ஏசிப்போபோவென்னும் வீடு—கிட்ட
எட்டிவாவாவென்னுங் காடு—இந்த உடலை

3. கண்ணில்பீளைகள்வடியும்—இரு
காதிற்குறும்பி படியும்—சளி
வண்ணமூக்கில்வந் திடியும்—நல்ல
வாயும்எச்சிலாய் மூடியும்—இந்த உடலை

4. பயனின்றிவிழு மட்டை—கொடும்
பாம்புகழற்றுஞ் சட்டை—போலே
உயிர்போனல்வெறுங் கட்டை—இதை
உற்றுப்பார்த்தால்லொட லொட்டை—இந்த
உடலை

5. காகம்நாய்நரிக் கூட்டம்—பல
கழுகுக்கும்நல்ல ஊட்டம்—கரு
மேகம்நிழல்போல ஓட்டம்—இது
மெய்யல்லபொம்ம லாட்டம்—இந்த உடலை

6 எத்தனைபேர்புவி யாண்டார்—அவர்
எல்லாவருமுன்னே மாண்டார்—இங்கே
செத்தவரில்எவர் மீண்டார்—தெய்வ
சித்தம்ஒருவருந் தாண்டார்—இந்த உடலை

7. மோடியேன்ஒருக் காலே—உடல்
முழுதும்எலும்பு தோலே—அதில்
நாடிஒடுங்கி னலே—பின்பு
நமக்கிங்கேயென்ன வேலை—இந்த உடலை

8. கணவன்தெய்வமென்பாள் பாரி—அவள்
காரியத்திற்கெட்டிக் காரி—செத்த

பிணமுன் வருவாளோ நேரில்—சுகம்
பிரிந்ததற்கல்லவோ ஒப்பாரி—இந்த உடலை

9 கிருமிகட்குப கரணம்—தசை
கிழிந்துவடியும் இரணம்—சிறு
கருமமேற்கொள்ளுந் திரணம்—இது
கரணந்தப்பினுல் மரணம்—இந்த உடலை

10. வேதநாயகன் கூறும்—சொல்லை
மீறினுல்நல மாறும்—பல
காதந்துர்க்கந்தம் நாறும்—பித்தம்
கபலமலஞ்சலம் ஊறும்—இந்த உடலை

பணதூஷணை

இராகம்-சங்கராபரணம். ரூபக தாளம்

பல்லவி

பணமேஉன்னுல் என்ன குணமே—தண்டம்
பண்ணினேன்சற்றும்என் கண்ணின்முன்
[னில்லாதே பணமே

அநுபல்லவி

மணமில்லாமத மோகங்குரோதந்துன்
மார்க்கமுமூர்க்கமும் யார்க்குமேபோதிக்கும் பணமே

சரணங்கள்

1. தேடிஉனைவைத்து மூடியவர்க்குநீ
தீர்க்காயுசுதருவாயோ—இனி
நாடியமன்வந்து சாடும்போதுநீ
நானென்றுமுன் வருவாயோ
கூடியபேர்கள் குடியைக்கெடுப்பாயோ
கொல்லச்சொல்லிபின்னுங் காட்டிக்கொடுப்பாயே
ஓடிஓடிஅற்பரைப் போயடுப்பாயே
உத்தமரைக்கண்டால் ஓட்டமெடுப்பாயே பண

2. மத்தியில்உன்னைப் படைத்ததல்லால்முன்
வரும்போதுகூட வந்தாயோ—இஷ்ட
சித்தியும்சத்தியும் நித்தியங்கைகூடச்
சிலாசாசனம்நீ தந்தாயோ
புத்தியிருக்கும் இடம்விட்டுநீங்குவாய்
பொய்யும்புரட்டும்உள்ள இடத்தோங்குவாய்
எத்திசையுங்கெடுத் துப்பழிதாங்குவாய்
ஈயாதவர்கை யகப்பட்டுத்தூங்குவாய் பணமே

3. மண்ணில்உனை நரர் பண்ணினதன்றி
மனிதரைநீபண்ணினுயோ—உயர்
விண்ணினைமண்ணினைப் பண்ணினேன்நேசம்
விலகச்செய் சத்துருநீயோ
என்னரிதான இடமெங்கும்ஓடுவாய்
இந்திரஜாலஞ் செய்துவிளையாடுவாய்
வண்ணநரர்கள் மனக்கண்ணைமூடுவாய்
வைத்துப்புதைத்தவர் வாயில்மண்போடுவாய்

4. வஞ்சகமாயப்பிர பஞ்சமெல்லாம்நீ
விளைத்துச்செய்வாய் கொடுங்கேண்மை—கெட்ட
நஞ்சம்நிகருனை நெஞ்சம்எண்ணுதமெய்ஞ்
ஞானிகட்கல்லவோ மேன்மை
பஞ்சமாபாதகங் கட்குநீஆலயம்
பாரில்துன்பமென்ப தெல்லாம்உந்தன்மயம்
மிஞ்சஉனையுடை யோர்க்கொழியாப்பயம்
வேதநாயகன்மே லுனக்குண்டோஜயம் பண

பரஸ்திரீகமணம் விலக்கல்

இராகம்-காமஸ், ஆதிதாளம்

பல்லவி

மாதரை நினையாதே-நெஞ்சே மாதரை

அநுபல்லவி

பூதலமேல்பெரும்—பாதகமும்விப
ரீதமுமேவரும்—ஆதலினல்மறு மாதரை

சரணங்கள்

1 அருமஞ்சட்பூச்சல்லவோ முகக்காந்தி
அடிக்கடிபெண்கள்நிற மாறும்பச்சோந்தி
ஒருமையாய் அவர்களை விரும்புதல்பிராந்தி
உடற்குட்புகுந்துபார்த் தால்வரும்வாந்தி மாதரை

2 முன்னழகும்பின் னழகுமேபட்டு
முக அழகானது நெற்றியிற்பொட்டு
அன்னநடையென்பது கவிஞர்கள்கட்டு
அழகுநில்லாமற் பறந்திடுஞ்சிட்டு மாதரை

3 மரித்திடும்மாதர்கள் சுகம்அரைக்ஷணமே
மறுநிமிஷத்தில்உண் டாந்துன்பரணமே
பிரிந்திடில்மலஜலம் எலும்புதோல்நிணமே
பிராணன்போனல்நரிநாய் பிடுங்கிடும்பிணமே மாதரை

4 மேனிமுழுதும்வெளி வேஷத்தின்தளுக்கு
மினுக்கெண்ணெய்பூசியே காட்டுவாள்தளுக்கு
ஈனம்அறவேதினந் தினந்தண்ணீர்முழுக்கு
இல்லாவிடில்கப்பல் ஏற்றலாம்அழுக்கு மாதரை

5 இடையில்மயக்குவது சாலியன்சேலை
இருகாதில்ஜொலிப்பது தட்டான்கைவேலை
கடையிலேவிற்பது கொண்டைப்பூமாலை
கன்னிக்குச்சேர்ந்தமெல் லாம்வெறுந்தோலே மாதரை

6 கன்னியர்விழிஉயிர் பிளந்திடும்அம்பு
கனதனம்நமன்குழல் உனைக்கட்டுந்தும்பு
அன்னியமாதர்கள் விஷமெனநம்பு
அவருடன்பேசுவ தேபெரும்வம்பு மாதரை

7 இதமாகவேமணஞ் செய்தசீமாட்டி
இகபரம்இரண்டிற்கு மேவழிகாட்டி
இதரமின்னார்களைச் சேர்வோன்காமாட்டி
என்றைக்கும்அவனுக்குமூத்தவன்பேட்டி மாதரை

8 என்றுங்காமதுரர்க்கு ரோகங்கள்நிலையே
ஈஎறும்போட்டகையில் வேண்டும்வேப்பிலையே
அன்றுகொண்டவன் அறிந் தால்வருங்கொலையே
அற்பசுகத்தில்வரும் ஆபத்துமலையே மாதரை

9 கழுவிவாசனைஊட்டா விடில்கெட்டவீச்சு
காதவழிஅடிக்கும் இதுநிசப்பேச்சு
தொழும்அழகென்ப தெல்லாம்மேற்பூச்சு
தோகையர்கிழமாறு னல்கனஏச்சு மாதரை

10 அழகழகென்பதெல் லாம்வெறும்ஜாலம்
அணியுந்துணியும்போ னல்அலங்கோலம்
விழல்நிகர்சுகத்தினை வெறுப்பதுசீலம்
வேதநாயகன் சொல்அநுகூலம் மாதரை

இதுவும் அது

இராகம்-சௌராஷ்டிரம், ஆதி தாளம்

பல்லவி

பெண்ணாசையே பெரும்பித்து—அதில்
பிரமிப்பதெல்லாம் விபத்து பெண்

அநுபல்லவி

கண்ணாலேவலை பூட்டி அற்பசுகம்
காட்டிப்புருஷரை வாட்டிவதைக்கும் பெண்

சரணங்கள்

1. கலகலென அசைப்பார் அவர்தண்டை
காட்டுமிருக மயிரேகொண்டை
உலகைமயக்கும் அவர்சேலைக்கெண்டை
உற்றுப்பார்த்தால்நன்மை ஏதவர் அண்டை பெ

2. கேவலம் அங்கமெல் லாம்பிணநாற்றம்
கிறுகிறெனமயக் கந்தலைக்கேற்றம்
ஓவியமேனி மினுக்குப்பொய்த்தோற்றம்
உள்ளேதிரும்பிப்பார்த் தால்முழுமாற்றம் பெ

3. கட்டிகட்டியாகக் கண்பீளைசாரும்
காதிற்குறும்பிசளி எச்சில்சேரும்
கொட்டும்வியர்வைதலைப் பேனும்ஈரும்
கும்பிநாற்றமாங் குளித்திட்டநீரும் பெண்

4. மண்ணில்எலும்புதோல் அல்லவோமாது
மற்றதெல்லாஞ்செட்டி தட்டார்செய்சூது
பெண்ணில்லாவிட்டால் பிழைப்பவர்க்கேது
பெண்ஜெபமும் அவர் போனால்செல்லாது பெண்

5. மண்ணிற்பரஸ்திரீயைச் சேருநிமித்தம்
வாழ்வுஞ்சுகமுந் தனமும் அநர்த்தம்
எண்ணில்லாத்துன்பமும் பண்களும்சித்தம்
ஈஎறும்புக்கு மகோற்சவம்நித்தம் பெண்

6. இரவில்கூத்தாடிகள் வேஷம்எடுப்பார்
இருட்டில்எவரும் மயங்கிக்கொடுப்பார்
தரையின்மின்னார்பகல் வேஷம்தொடுப்பார்
ஜாலவித்தைசெய் துலகைக்கெடுப்பார் பெண்

7. உண்டால்விஷம் வெட்டினாற்கொல்லுங்கத்தி
உன்னினோர்கண்டோரைக் கொல்லும்பெண்
அண்டாமல்ஆடவர் ஓடுதல்புத்தி [சத்தி
அமர்வேதநாயகன் சொற்கேட்டால்சித்தி பெ

துர்வழக்காளிகளைப்பற்றி

இராகம்-சௌராஷ்டிரம், அடதாள சாப்பு

பல்லவி

இந்தவழக்குக்கெல்லாம் நாம்தானு—கோர்ட்டில்
வந்தவன்எல்லாம்நமக் கெஜமானு இந்த

அநுபல்லவி

நந்தன்வலியச்சண்டை பிடித்தானும்—அந்த
நாகனைத்தட்டிஅவன் அடித்தானும் இந்த

சரணங்கள்

1 தந்தைதுன்மார்க்கஞ்செய்து கெட்டானும்-பிள்ளை
தாரங்களைத்தெருவில் விட்டானும்
முந்தஅதிகக்கடன் பட்டானும்—நிலம்
முழுதுந்துர்விநியோகம் இட்டானும் இந்த

2 அண்ணன் தம்பிமார்களை வெறுத்தானும் அவர்க்
காஸ்திபாகங்கொடாமல் மறுத்தானும்
கண்ணன்வயலைப்பொன்னன் மறுத்தானும் கடைக்
காரன்கெட்டசரக்கை நிறுத்தானும் இந்த

3 ககனப்பூவந்திமகன் கொய்தானும்—அதைக்
கண்டுகுருடன் அம்பால்எய்தானும்
ஜெகமிசைஊமையனும் வைதானும் அதைச்
செவிடன்கேட்டுநகை செய்தானும் இந்த

4 துங்கன்வாதியைக்கண்டு சிரித்தானும்—சிங்கன்
தும்மிஇருநெட்டி முரித்தானும்
தங்கன் இரண்டுகையும் விரித்தானும்—அந்தச்
சாந்தனுந்தன்முகத்தைச் சுரித்தானும் இந்த

5· கரமிலான்வாதியைப் பிடித்தானும்—இரு
காலிலான்உதைத்துதைத் திடித்தானும்
சிரமில்லாதவன் கடித் தடித்தானும்—பதம்
செய்யும்வேதநாயகன் படித்தானும் இந்த

உத்தியோக சங்கடம்

இராகம்-நாதநாமக்கிரியை, ஆதிதாளம்

பல்லவி

அப்பா இதென்ன அதிகாரம்—ஐயோ
எப்போதும்பக்திசெய்ய இல்லையேநேரம் அப்பா

அநுபல்லவி

கப்பையரோ அபத்தமூட்டை—அந்தச்
சுந்தரய்யர்வழக்கிலே தொளாயிரம்ஒட்டை
அப்பையர் கற்பிப்பார் பொய்சீட்டை—அந்த
அனந்தய்யர்கட்டுவார் ஆகாசக்கோட்டை
அப்பா

சரணங்கள்

1. சிலர்கேட்பார் கற்பகச்சோலை—வேறு
சிலர்கேட்பார்நமன் அணு காமலேஓலை
பலர்கேட்பார் நூறுபுலிப்பாலை—அல்லும்
பகலும்உலகில்நமக் கிது தானுவேலை அப்பா

2. அண்டப்புரட்டன் அந்தவாதி—அகி
லாண்டப்புரட்டன்அப்பா அவன்பிரதிவாதி
சண்டப்பிரசண்டன் நியாயவாதி—நாளும்
சகஸ்திரப்புளுகன்சாக்ஷிக்காரனென்னும்
[கியாதி அப்பா

3. எப்போதும் பொய்வழக்கர்கூட்டம்—அவர்க்
கிந்திரலோகங்கிடைத்தாலும் இன்னமுந்தான்வாட்டம்
தப்புசாக்ஷிகள் வாய்நீட்டம்—பொய்ச்
சத்தியம்ஆணையென்றால் அவர்க்குக்கொண்டாட்டம்
[அப்பா

4. பேராசைக்காரன் குப்பன்செட்டி—அவன்
பிர்மாதிகளிடத்தும் வாங்குவான்வட்டி
சோரன்வழக்கில் சிங்கக்குட்டி—இவர்
சூதால்வேதநாயகன் பதந்தொழஅட்டி அப்பா

இதுவும் அது

இராகம்-புன்னாகவராளி, திரிபுடை தாளம்

பல்லவி

போதும்போதும்உத்தியோககனமே—இதில்
ஏதுசுகம் தமக்குமனமே போதும்

அநுபல்லவி

ஓதக்கடலின் அலைக்கோய்வுண்டோ ஆரவாரம்
வேதநாயகன்நாமம் விளம்பவுண்டோநேரம்
போதும்

சரணங்கள்

1. சிலர்நிலவழக்குகள் கொடுப்பார்—வேறு
சிலர்பணவழக்குச் செய்தடுப்பார்
பலரும்நம்முடன் சண்டைதொடுப்பார்— அல்லும்
பகலும்நம்பிராணனை எடுப்பார்
உலகில்வழக்கிழந்தோர் ஊரெங்குந்தூற்றுவார்
நலமில்அப்பீல்கோர்ட்டார் நம்தீர்ப்பை மாற்றுவார்
போதும்

2. ஒருவன்கேட்பான் அளகாபுரியை—வேறு
ஒருவன்கேட்பான் மேருகிரியை
ஒருவன்கேட்பான் அருணன்பரியை—வேறு
ஒருவன்கேட்பான் வெள்ளைக்கரியை
நரர்பக்ஷந்தீர்த்தால்விண் ணுட்டோர்க்குமனஸ்தாபம்
சுரர்பக்ஷம்தீர்ப்புசெய்தால் துஷ்டநரர்க்குக்கோபம்
போதும்

3. எந்நேரமும் ஓயாவேலை—இதில்
என்னபெற்றோம் முத்துமாலை
அந்தஉத்தியோகமே ஆலை—அதில்
அகப்பட்டநாம் கரும்புபோலே
சந்ததமும்உழைத்துந் தணிந்ததுண் டோக்ஷாமம்
இந்தக்கூழுக்குத்தானா இருபதுபட்டாக்கிராமம்
போதும்

4. எழிதியெழுதிஎன்ன கிரீடம்—பெற்றோம்
இங்கிதம்தெரியார் நிர்மூடம்
பழுதுசொல்வதிவர்க்குப் பாடம்—பஞ்ச
பாதகங்களுக் கிவர்பீடம்
அழுதாலுந்தொழுதாலும் அவர்துர்க்குணம்போமோ
கழுதைக்குவாழ்க்கைப்பட்டுக் கடியுதைக்கஞ்சலாமோ
போதும்

பெரிய துரையாகிய கடவுளுக்கும் மனுஷத்துரைகளுக்கும் உள்ளபேதம்

இராகம்-சௌராஷ்டிரம், ஆதி தாளம்

பல்லவி

அந்தப்பெரியதுரைக்—கிந்தத்துரைகள்சரியா
மூடமனமே
விந்தைபொன்னுக்குநிகர்—நிந்தைக்குரியகரியா அந்த

அநுபல்லவி

இந்தப்புவியில்நமைச்—சொந்தப்பொருளாச்செய்து
தந்தைக்குநிகராகச்—சிந்தைக்குள்உறையும் அந்த

சரணங்கள்

அந்தத்துரைநாம்செய்யும் எந்தபிழைகளையும்பொறுப்பான்
இரக்கமின்றி

இந்தத்துரைநாம்செய்யும் எந்தபிழைக்கும்தலை அறுப்பான்
வேலைகொள்ளாமல்
அந்தத்துரைதான்நமக் கெந்தப்பொருளுந்தந்திருப்பான்
வேலைவாங்கியும்
இந்தத்துரைநமது சொந்தப்பொருளையுமேயறுப்பான்
விளையாட்டாக

அந்தத்துரையுலகம் அமைத்தளித்தழிப்பான்
இந்தத்துரைகந்தலை இரண்டாகக்கிழிப்பான்
அந்தத்துரைதனிமை யாய்பகைஒழிப்பான்
இந்தத்துரைபடைகள் இருந்துமேவிழிப்பான் அந்த

2. அந்தத்துரைவாகன மின்றிஅண்டங்களெல்லாம்கடப்
முடவன்போலே [பான்
இந்தத்துரைவாகனம்இல்லாவிட்டால்விழுந்துகிடப்பான்
எக்காலமுமே
அந்தத்துரைதானென்றும் அருந்தாமல்நமக்கன்னம்
சோறுங்கறியும் [படைப்பான்
இந்தத்துரைதான்நமக்கீயாமல்தன்வயிற்றில்அடைப்பான்
பலவகையில்

அந்தத்துரைதான்நமக் கனுதினம்உழைப்பான்
இந்தத்துரைதான்நம்மை ஏவல்கொண்டுபிழைப்பான்
அந்தத்துரையென்றைக்கும் அழிவின்றித்தழைப்பான்
இந்தத்துரையையினி இயமன்வந்தழைப்பான் அந்த

3, அந்தத்துரைசகல அந்தரங்களையுந்தெரிவான்
குருடன்போலே
இந்தத்துரையுலகில் ஏதுந்தெரியாமலேதிரிவான்
துஷ்டரையெல்லாம்
அந்தத்துரையடக்கி முந்தச்சிஷ்டருக்கருள்சொரிவான்
பொய்யரையெல்லாம்
இந்தத்துரைஉயர்த்தி வந்தநல்லவர்க்கிடர்புரிவான்
சத்தியமாக

அந்தத்துரைதான்சுத்த அமலசொரூபி
இந்தத்துரைஉலகில் இணையில்லாப்பாபி
அந்தத்துரைவேத நாயகன்மனவியாபி
இந்தத்துரைஎவர்க்கும் ஈயாதலோபி அந்த

கோட் சொல்லும் உத்தியோகஸ்தர்களைப் பற்றி

இராகம்-அசாவேரி, திரிபுடை தாளம்

பல்லவி

எந்தநாளிலுந்தர்மமே ஜெய
ஏன் மயங்குகின்றாய்—பெண்ணே

அநுபல்லவி

நிந்தனைபலர் கூறட்டும் அவர்
நினைவெல்லாம் நிறைவேறட்டும்—பின்பு
சிந்தனை தடுமாறட்டும்—அவர்
சிரிப்பார்சிரித்து நாறட்டும்—பெண்ணே எந்த

சரணங்கள்

1. எரிகிறவீட்டில் பிடுங்குவதுலாபம்
என்றுசொல்வார் அந்த வண்ணமே
பெரியகோட்சொல்லிநம் உத்தியோகத்தைப்
பிடுங்குவதிவர் எண்ணமே
சரியிவர் எண்ணம் முடிக்கட்டும்—வஞ்சம்
சர்வகொள்ளைகள் அடிக்கட்டும்—உண்மை
துரைகள்கண்டு பிடிக்கட்டும்—அந்தத்
துஷ்டரைடஜன் அடிக்கட்டும்—பெண்ணேஎந்த

2. வரும்இடரெல்லாம் வரட்டும் நாம்அதில்
வருத்தங்கொண்டென்ன சாரமே
சருவமூடர்கள் வாழும் நாட்டினில்
சாதுகட் அபசாரமே

துரைகள் நம்மைக் கெடுக்கட்டும்—அந்தத்
துஷ்டர்க்குத்தியோகங் கொடுக்கட்டும்—அவர்
தரையில்கெட்டபே ரெடுக்கட்டும்—பின்பு
தம்பிமார்களை முடுக்கட்டும்—பெண்ணே எந்த

3. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
வாழ்வது நமக் கருமையா
நல்லவர்க்கிது காலமா இங்கு
நாமிருப்பது பெருமையா
கல்லில்நார் இவர் உரிக்கட்டும்—அவர்
கால்விலங்கு தரிக்கட்டும்—கண்ட
எல்லவருமே சிரிக்கட்டும்—மிக
என் சொல் அப்போது சரிக்கட்டும்—பெண்ணே

4. கோளும்பொய்களும் கூறட்டும் நாய்
குலைத்து நத்தம் பாழாகுமா
மூளும்சூரியன் ஒளியைக் கையினால்
மூடமறைந்து போகுமா
நீளுந்தீயர்கள் குதிக்கட்டும்—அவர்
நெஞ்சில்வஞ்சகம் பதிக்கட்டும்—நமை
நாளுமே அவமதிக்கட்டும்—வேத
நாயகன் சிக்ஷை விதிக்கட்டும்—பெண்ணே எந்த

உத்தியோகத்தை வெறுத்தல்

இராகம்-மோகனம், ஆதி தாளம்

பல்லவி

இந்த உத்தியோக மென்ன பெரிதா—நெஞ்சே
இதுபோனால் நாம் பிழைப்பதரிதா இந்த

அநுபல்லவி

எந்தவிடம்போனாலும் கதம்பப்பொடி வாசிக்கும்
அந்தவிதமாய்நம்மை அகிலமெல்லாம்பூசிக்கும் இந்த

சரணங்கள்

1. நல்லபிரபுக்களெல்லாம் நாட்டைவிட்டே அகன்றார்
ஞானசூனியரெல்லாம் நமக்கதிபதியென்றார்
இல்லாததோஷநம்மேல் எடுத்தவர்முடிகின்றார்
இரவியிலுங்களங்கம் இருக்குமெனப்புகன்றார்
[இந்த

2 ஆகாதகாலம்இதில் அசடர்தலையெடுத்தார்
அருங்குணசீலர்கள் அதிகாரங்கைவிடுத்தார்
போகாமறற்கொளரும் பொய்யரும்வந்தடுத்தார்
பூவிற்றகடையிலே புல்விற்கத்தொடுத்திட்டார் இந்த

3. இந்தஉலகுக்கெல்லாம்இவரே அதிபதியா
இவருக்குழைக்கநமக் கென்ன தலைவிதியா
அந்தமாகவேபடி அளப்பதிவர்பொதியா
ஆயிரந்தொழிலும்நாம்அறியாதசங்கதியா இந்த

4. பாரில்இவரைக்கண்டோபடித்திட்டோம்பலபாட்
பட்டதற்கென்ன தந்தார் பாக்கியங்கூடை [டை
ஊரில்உத்தியோகம்போனல் ஒழியும்பிடித்தபீடை
உயர்வேதநாயகன் உதவுவான்அன்னம்ஆடை இந்த

துன்பத்திற்கு அஞ்சாமை

இராகம்-முகாரி, ஆதி தாளம்

பல்லவி

என்னவந்தாலும் மனமே—ஐயன்
இருக்கையில் என்னவிசனமே என்ன

அநுபல்லவி

மன்னர்பகைக்கில்உயிர்—தன்னைவதைப்பர்வே
றென்னசெய்வார்நிதம்—பன்னரும்இடர்கள்என்ன

சரணங்கள்

1. உத்தமமான சஞ்சீவி—கையில்
உடையவரைக்கொல்லுமோ நாவி
அத்தனைநம்புமேதாவி—தன்னை
அலைக்குமோ துயரமுமேவி
கத்தனைமறந்தவர்—சித்தமேகவலைகள்
வைத்தபாத்திரமாகும்—நித்தமும்துன்பம்என்ன

2. ஈடறுகாவுடன் ஓடை—அரு
கிருக்கையில்என்செயுங் கோடை
மாடகூடகோபுர மேடை—தனில்
வசிப்பவர்க்குண்டோ குளிர்வாடை
தேடரியபுண்ணியபொற்—பீடம்அமர்ந்தன்பெனும்
கிரீடந்தரித்தோர்க்கின்பம்—நாடகம்செயும்நோய்என்ன

3. ஓதரும்தேவதாபக்தி—நாளும்
உலகில்யாவையும் வெல்லும்கத்தி
போதமுடன் அதுவேமுத்தி—அதில்
புருஷார்த்தங்களெல்லாம் சித்தி
வேதநாயகன்பத்தர்—மீதமருந்துன்பங்கள்
ஆதவன்முன்பனியாம்-ஆதலில்துயரம் என்ன

பிறர்மேல் குறைகூறாமை

இராகம்-பைரவி, ஆதிதாளம்

பல்லவி

ஒருவர்மேலுங்குறைநீ கூறாதே—திரு
உளச்செயற்காப்பிறரைச் சீறாதே ஒருவர்

அநுபல்லவி

வருவதுவந்தொழிய மாறாதே—கரு
மஞ்சுக்கிணைகிருபேசன்—கஞ்சக்கழல்மறந்து
வஞ்சக்கடலில்விழும் நெஞ்சக்குரங்கேநீ ஒருவர்

சரணங்கள்

1. துன்பம்என்பதெவர்க்கும் சுதந்தரமே— அதை
தொலைப்பதற்குண்டோஒரு தந்திரமே
இன்பம்உற்றெவரெவர் நிரந்தரமேபிறர்
இடிக்கவந்தாலுங்கட்டி— அடிக்கவந்தாலும்பழி
முடிக்கவந்தாலும்உயிர்—மடிக்கவந்தாலும்நீ ஒருவர்

2. பொறுமைஎக்காரியமும் சாதிக்குமே—அதைப்
பூண்டவர்க்கேசுகம் ஆதிக்கமே
மறுமையின் துயரத்தைப் போதிக்குமே—மிக
மகிழ்ந்தபோதிலும்துயர்—நிகழ்ந்தபோதிலும்பிறர்
புகழ்ந்தபோதிலும்உனை-இகழ்ந்தபோதிலும்நீ ஒருவர்

3 மற்றவர்தாம்செய்யினும் பெருந்தீங்கு—அதை
மனதிற்கொள்ளாதிருப்பதே பாங்கு
குற்றமாகியவழி தனைநீங்கு—மிகக்
கோத்தபலபுவனம்—காத்தபரன் அடியை
ஏத்தும்வேதநாயகன்—வார்த்தையின்படிநீ
ஒருவர்

குடும்ப சம்பந்தக் கீர்த்தனைகள்

தாய்தந்தையரை நமஸ்கரித்தல்

:இராகம்-பியாகு, ஆதி தாளம்

கண்ணிகள்

1. உற்றவரேஎனைப் பெற்றவரேதினம்
உமக்கே நமஸ்காரம்
முற்றுமேநீர்செய்த உதவிக்குநான்என்ன
மொழிவேன் உபசாரம்

2. பத்துமாதம்என்னை வயிற்றிலேசுமந்து
பலதுயர் சகித்தீரே
எத்தனைபிராண சங்கடமுடனேஎனை
ஈன்றுநீர் வகித்தீரே

3. பெற்றீர்வளர்த்தீர் பேரும்இட்டீர்ஜீவ
பிரதிஷ்டைசெய்தீரே
உற்றஉம்உதிரத்தை மூலைப்பாலாகவே
ஊட்டியே உய்வித்தீரே

4. தேனினும்அமிர்தினும்இனிதேஎனக்குநீர்
செப்பிய தாலாட்டு
வானினும்அமரர்க்கு வருமோஇதுபோல்
மங்களத் திருப்பாட்டு

5. மாந்தவியாதிகள் எனையணுகாமலே
மருந்துகள் கொடுத்தீரே
வாந்தியும்மலஜல அசுத்தமும்சகித்தெனை
மார்புற எடுத்தீரே

6 உடல்உயிர்சகலமும் நீர்தந்ததேயன்றி
உண்டோ இனிவேறு
அடரும்உலகெலாம் உமக்களித்தாலுமே
ஆமோ கைம்மாறு

7. சீவன்போல்நீர்என்னைவளர்த்திட்ட அருமையைச்
செப்ப என்னால்ஆமோ
நாவேஆயிரம் இருக்கினும்நீர்செய்த
நன்மையைச் சொல்லப்போமோ

8. கவலையெல்லாம்என் கவலையல்லால்வேறு
கவலையொன் றறியீரே
புவியிலேஎன்சுகம் அல்லதுவேறொரு
பொருளையுங் குறியீரே

9 பாலவியாதிகள் எனை அணுகாமலே
பத்தியம் பிடித்தீரே
காலமெல்லாம்பல விரதங்கள் அனுஷ்டித்துக்
கருமங்கள் முடித்தீரே

10. இரவுமுழுதுமே தூங்காதிருந்துநீர்
எந்தனைக்காத்தீரே
அரவுமுதற்பல ஜெந்துக்களால்வரும்
ஆபத்தைத் தீர்த்தீரே

11 தரணியில்என்சுகம் வேண்டியேநீர்பல
தருமங்கள் செய்தீரே
கருணைசெய்யும்படி கடவுளைத்துதித்துநற்
காணிக்கை செய்தீரே

12. சற்றுநீர்என்னைமுன் மறந்திருந்தால்நான்
சடலம் பொறுப்பேனோ
உற்றுஉலகிலே இந்நாள்மட்டும்நான்
உயிர்வாழ்ந் திருப்பேனோ

13. காணுத்தெய்வத்தின் அருளாலேவந்த
கண்கண்டதெய்வம் நீரே
ஆணுப்பெண்ணுயிரா அந்தத்தேவனையும்
அன்னைதந்தை யென்பாரே

14. எனக்கொருசுகம்வரில் உமக்குவந்ததுபோல்
எக்களிப் படைந்தீரே
எனக்கொருதுயர்வரில் உமக்குவந்ததுபோல்
ஏங்கிஉள் ளுடைந்தீரே

15. பாலுஞ்சோறும் பக்ஷணங்களும்எனக்கிட்டுப்
பழஞ்சோ றுண்டீரே
காலமெல்லாம்நல்ல சோமனுன்உடுக்கநீர்
கந்தையைக் கொண்டீரே

16. சப்பிரமஞ்சத்தில் நான்படுத்துறங்கநீர்
தரையிலே படுத்தீரே
கைப்பொருளெல்லாம் என்னிமித்தம்பரி
காரிக்குக் கொடுத்தீரே

17 வாக்கால்உளறுஎன் மழலைச்சொல்கேட்டுநீர்
மகிழ்ந்தே துதித்தீரே
காக்கைக்கும்தன் குஞ்சுபொன் குஞ்சென்பது
கரிசனம் பதித்தீரே [போல

18. குற்றம்எத்தனையோசெய்தேன் அவற்றைக்
குணமாய்க் கொண்டீரே
சற்றும்நான்நோய்கொள்ளில்அன்னம் நித்திரையின்றித்
தளர்ந்துமெய் துவண்டீரே

19. தோளினும்மார்பினும் இடையினுமேயெனைத்
தூக்கிக்கொண் டலைந்தீரே
நீள்பஞ்சகாலத்தில் உள்ளசோறெனக்கிட்டு
நீர்பசித் துலைந்தீரே

20. சுயநலம்வேண்டி இங்கொருவர்க்கொருவர்
துணைசெய்வர் மெய்தானே
பயனென்றும்வேண்டா தெனைநீர்வளர்த்திட்ட
பக்ஷம்என் சொல்வேனே

21. உறவினரெல்லாம் உம்மாலேவந்த
உறவினர் தாமலவோ
அறநெறிகாட்டும் குருவுமேநீரெனில்
அயலினி என்சொலவோ

22. பலபொருள்எனக்குச் சம்பாதித்துவைக்கவே
பலவிதம் உழைத்தீரே
நிலமிசைஉம்முயிர்க் குயிர்நானேஎன்று
நினைத்துநீர் பிழைத்தீரே

23. தாரம்போனாலும்மறு தாரம்வருவர்பெற்ற
தநயரும் அப்படியே
நீர்போனல்வேறு தாய்தந்தையர்வந்து
நேருவதெப்படியே

24. தக்கபருவத்தில் எனை அடக்கிப்பாட
சாலையில் விட்டீரே
பக்கமெலாந்திரிந் தென்னாலேபல
பாடுகள் பட்டீரே

25. இளமைப்பருவத்தில் என்னால்வருந்துன்பம்
எல்லாம் பொறுத்தீரே
தளர்ந்தபருவத்தில் உம்மால்வருந்துன்பம்
சகிப்பது பெருஞ்சீரே

26. துக்கங்களெல்லாம் நிர்வகித்துக்கொண்டு
சுகம்எனக் களித்தீரே
மக்களேசகல பாக்கியமென்றெண்ணி
மனம்மிகக் களித்தீரே

27. மண்பிள்ளையாயினும் தன்பிள்ளையென்றெனை
மகிழ்ந்தா தரித்தீரே
பண்புடன்என்பொருட் டாகநீர்பலரையும்
பணிந்துப சரித்தீரே

28. தெரியாமல்நான்செய்த பிழைபொறுத்தென்
திருவருள் பதிப்பீரே [னிடம்
அரும்வேதநாயகன் அருள்செய்யும்படிஎன்னை
ஆசீர்வதிப்பீரே உற்றவரே

தகப்பன் மகனுக்குப் புத்திகூறல்

இராகம்-மோகனம், ஆதிதாளம்

பல்லவி

மார்க்கம்இதுமகனே—சந்திரன்
தோற்கும் எழில் முகனே மார்க்கம்

அநுபல்லவி

மூர்க்கருடனே உறவாடாதே—பழி
மூண்டிடும்சூது விளையாடாதே—இந்தப்
பார்க்குள்ஒருபொய் சொல்லக்கூடாதே—மது
பானம்விரும்பி மனம்வாடாதே-சன் மார்க்கம்

சரணங்கள்

1. நித்தியன்பொன்னடி யிணையே—துயர்க்கடலேயே
நீக்குதற்குதவும் புணையே
பக்திமான்கட்குண்டோ இணையே—கடவுள்நேசம்
பரகதிக்குவழித் துணையே
சத்தியமார்க்கத்தைப் பிரியாதே—பல
தப்புவழியை அனு சரியாதே—சுய
புத்தியில்லாமல்எங்குந் திரியாதே—இந்தப்
பூவில்எவர்க்கும் இடர்புரியாதே—ஈசன் மார்க்கம்

2. புண்ணியபாவங்கள் இரண்டே—நிச்சயம்அந்தப்
புண்ணியவழியைநீ அண்டே
மண்ணினுமேமகிமைகொண்டே-பிழைப்பதன்றி
மறுமையினும்பாக்கியம்—உண்டே
கண்ணியமாகஎன்றும் பிரகாசி—நல்ல
கன தந்தைதாய்பெரியர் அடிபூசை—தினம்
அண்ணன் தம்பிசோதரி களைநேசி—நிதம்
அன்னம்எளியர்க்கிடு நயம்பேசி-சன் மார்க்கம்

3 சத்திய அடக்கம்பொறையே—முதலாகிய
சற்குணங்களோடு—நிறையே
சித்திபெறில்ஒரு குறையே—அணுகாதுனைச்
செப்பினேன் நான்நீதி—முறையே
சுத்தமாகவேதினம் நீராடு
தூயவஸ்திரங்களைக் கையாடு —கன

புத்திமான்களுடனே தினம்கூடு—கெட்ட
புல்லரைக்காணில் அஞ்சியேஓடு—சன் மார்க்கம்

4. கல்விநமக் கவசியமே—கற்றவர்க்கிந்தக்
காசினில்எல்லாம் வசியமே
செல்வமுடன்வரும் நயமேகற்றவர்க்கென்றும்
ஜீவனத்துக்கில்லை பயமே
பல்வகைப்படிப்பையும் நீங்காதே—உன்
பாடம்படிக்காமல் தூங்காதே—நீ
நல்வழிநடக்கப்பின் வாங்காதே—எந்த
நாளும்நீகடன்வாங்கி ஏங்காதேசன் மார்க்கம்

5 பாடமெல்லாம்நெஞ்சில் இருந்து—எழுதப்பேசப்
பாடவும்பழக்கம் பொருத்து
நீடுகையெழுத்தும் திருத்து—கற்றபடிநீ
நிற்கவேண்டும்ஈதென் கருத்து
ஏடுங்கையுமாயிரு வாடாதே—நீ
என்றும்பிறர்பொருளை நாடாதே—சர்வ
மூடரைக்கூடிவிளை யாடாதே—என்றும்
மூக்குத்தூள்புகையிலை போடாதே-சன் மார்க்கம்

6 சீலத்தைக்கை விடாதே—துர்ப்போதனை
செய்பவர்க்கிடங் கொடாதே
ஜாலத்துக்குட் படாதே—மாதுஷ்டனென்று
தாரணியிற்பேர் எடாதே
காலத்தைவிருதா விற் கழிக்காதே—உன்
கைப்பொருள்வீணிற்செல வழிக்காதே—இந்த
ஞாலத்தொருவரையும் பழிக்காதே—வேத
நாயகனைமறந்து விழிக்காதே—சன் மார்க்கம்

தகப்பன் மகளுக்கு புத்திகூறல்

இராகம்-சஹானு, ஆதி தாளம்

பல்லவி

புத்தியிதுமகளே—உனக்குற்—புத்தி இது மகளே

அநுபல்லவி

நித்தியம்பரன் நேசம்விடாதே
சத்திமார்க்கத்தைத் தாண்டிக்கெடாதே புத்தி

சரணங்கள்

1. ஆலயம்குருக்களை அசட்டைபண்ணுதே
அடிக்கடிஜெபம்செய்யா திருக்கவொண்ணுதே
காலந்தனைவீணில் கழிக்களண்ணுதே
கண்ணேபிக்ஷையிடாமல் உண்ணுதே புத்தி

2 மாதாபிதாக்களை மகிழ்ந்துநீதாங்கு
மண்ணில்நல்லபிள்ளை யென்றுபேர்வாங்கு
தீதுகள்உனக்குசெய் தோர்க்குமேதீங்கு
செய்யாமலிருப்பது திருவுளப்பாங்கு புத்தி

3. ஞானபுஸ்தகங்களை நாளும்நீவாசி
நல்லவருடன் கூடி நாதனைநேசி
ஈனர்தமக்குஞான மேஉபதேசி
என்றுங்குணவதி யேமகராசி புத்தி

4. உயிர்போனுலும்நீ ஒருபொய்சொல்லாதே
உன்வீடுகடந்தயல் வீடுசெல்லாதே
பயில்மறுபுருஷர்கள் பார்க்கநில்லாதே
பாவத்தைகனவிலும்நினைத்தல்பொல்லாதேபுத்தி

5. அம்புவியே அறங்கைவிடாதே
அற்பப்பொருள்விரும்பி ஐயோகெடாதே
வம்புக்காரிகளுடன் வார்த்தைகொடாதே
மற்றவர்பொருளைக்கண் டாசைப்படாதே புத்தி

6. வாழ்வுவந்தாலும்நீ மயங்கித்துள்ளாதே
மற்றவர் இழிவைஉன் வாயால்விள்ளாதே
தாழ்வுவந்தாலும்நீ சலித்துக்கொள்ளாதே
சகலமும்பரன்செயல் தடுத்துத்தள்ளாதே புத்தி

7. மாமிநாத்திகளை மதித்துறவாடு
மகளுந்தாயும்போல மகிழ்ந்துநீகூடு
சாமியாகுங்கணவன் தயவைநீதேடு
தலையணைமந்திரம் ஓதுதல்கேடு புத்தி

8. தப்பாமல்எளியவரைத் தாங்கிக்கைதூக்கு
தானதருமம்ஜெப தபத்தில்நாள்போக்கு
கைப்பாகத்திலே உன் கணவனுர்மூக்கு
கம்மென்றுமணமேறக் காய்கறியாக்கு புத்தி

9. விடியுமுன்எழுந்துநீ வேலையைநாடு
வீட்டைக்கண்ணாடிபோல் விளக்கிக்கையாடு
உடலும்ஆடையும்அழுக் கொழியநீராடு
உடலம்பெருக்கத்தீனி உண்பதுகேடு புத்தி

10. சொந்தவேலைகள்செய்ய சோம்பிநையாதே
துன்பம்செய்தவர்க்குநீ துன்பஞ்செய்யாதே
வந்தயெளியவரை வாட்டிவையாதே
மாவேதநாயகன் வார்த்தைபொய்யாதே புத்தி

பெண்பார்க்கத் தூதனுப்புதல்

இராகம்-உசேனி, ஆதி தாளம்

பல்லவி

நல்லபெண்ணைப்பார் நீதூதா
நல்லபெண்ணைப்பார் நீதூதா நல்ல

அநுபல்லவி

அல்லடாகேள் இந்தப் பூமியின்மேலே
ஆயிரங்காலத்துப் பயிராகையாலே நல்ல

சரணங்கள்

1. அதிகபேச்சுக்காரி பெரும்வம்பி
ஆயிரமானாலும் அவள்வேண்டாந்தம்பி
நிதம்நிதம்ஊரெல்லாம் நீட்டுவாள்கம்பி
நிச்சயம்அவள்ஆகாள் நீஎன்சொல்நம்பி நல்ல

2 எழுத்துவாசம் அறியாதவள்மட்டி
ஏதும்அறியாள் அவள் சுரண்டுவாள்சட்டி
கழுத்திலே அவளுக்குத் தாலியைக்கட்டி
காரியமில்லை அது காசுக்குநஷ்டி நல்ல

3 அழகுங்குணமுள் ளவள்நல்லஜோடு
அழகில்லையாயினும் குணத்தையேதேடு
பழகுநற்குணமில்லா அழகியின்வீடு
பாம்பு புலிகரடி வாழ்ந்திடுங்காடு நல்ல

4 வீட்டுவேலைதெரி யாதவள்வேம்பு
மினுக்கும்அவள்குலுக்கு மேவெறும்வீம்பு
கூட்டுநற்குணமில்லாக் கொடியவள்பாம்பு
குலத்தைக்கெடுக்கவந்த கோடாரிக்காம்பு நல்ல

5 நகைகள் தரித்தமஞ்சள் வாடைகள்பூசு
நாடெங்குந்தெரியவே நகைத்து கைவீசி
சொகுசுடன்நடப்பவள் ஆயிரந்தாசி
சும்மாவந்தாலும்அவள் வேண்டாம்சீச்சீ நல்ல

6 தேவதாபத்திஇல் லாதவள்கள்ளி
திருட்டுக்கும்புரட்டுக்கும் அவள்ஒருபள்ளி
தாவில்புருஷன்குடில் கவள்பெருங்கொள்ளி
சனியனைவிலைக்கு வாங்காமல்நீதள்ளி நல்ல

7 உடைமைகளுடன்பணங் காசின்மேல்இச்சை
உள்ளவள்சண்டைக்குக் கட்டுவாள்கச்சை
இடைவிடாமல்கெடு மேஎன்லச்சை
இவளைக்கொள்ளுவதிலும் எடுக்கலாம்பிச்சை நல்ல

8 சந்ததங்கணவன்மேல் ஒழியாப்பத்தி
சாந்தம்பொறுமையை தானம்நற்புத்தி
எந்தவேளையும்உடல் ஆத்துமசுத்தி
இல்லாதவள் அவள் கழுத்துக்குக்கத்தி நல்ல

9 நல்லவள்ஏழை யானுலுங்கட்டாதே
நானூறுபோனுலும் நீபின்னிடாதே
பொல்லாதவர்கையில் காட்டிக்கொடாதே
புலியைக்கொண்டுவந்தென்னைத் தெருவில்விடாதே நல்ல

10 சகலகாரியமுந் தெரிந்தவள்சிலாக்கியம்
தரித்திரதிசையிலும் அவள்பெரும்பாக்கியம்
இகபரமிரண்டுக்கும் அவளேயோக்கியம்
என்றுசொன்னன்வேத நாயகன்வாக்கியம் நல்ல

தலைவனிடத்து வைக்கவேண்டிய நேசத்தைப்பற்றித்
தலைவன் கூறல்

இராகம்-சௌராஷ்டிரம், அடதாள சாப்பு

பல்லவி

பத்தினிபோல்நமக் கித்தரைமீதினில்
உற்றவர்யார் மனமே பத்தினி

அநுபல்லவி

சத்தியமாகவே தாய்க்குப்பின் தாரம்
தாரத்தினுல்அல்ல வோசமுசாரம் பத்தினி

சரணங்கள்

1. இல்லாளுமேநாமுமே ஏகசரீரம்
என்பதுவேமனு நீதியின்சாரம்

நல்லவளேநம் மனைக்கலங்காரம்
நாட்டிலேமற்ற உறவெல்லாந்தூரம் பத்தினி

2. கைப்பொருள் இல்லா விட்டாலும்நற்பாரி
கைவசமானல் அவளேபொன் மாரி
எப்பொருளும்இருந் தாலும்ஓர்நாரி
இல்லாதவீடு தண்ணீரில்லாஏரி பத்தினி

3. பெண்ணென்ருல்பேயும் இரங்கும்என்பாரே
பெண்ணை அடித்தால் வருங்கெட்டபேரே
கண்ணே இமைகாப் பதுபோலநேரே
காதலிதன்னைக் காப்பாற்றுதல்சீரே பத்தினி

4. பந்துஜனமெல்லாம் வீண்பரிவாரம்
பாரில்அவரால் உண்டோஉபகாரம்
அந்தரந்தன்னில் உதவுவாள் தாரம்
ஆபத்துவேளைக் கவளே ஆதாரம் பத்தினி

5. தாய்தந்தையரையும் விட்டுவந்தாளே
சம்சாரபாரத்தைத் தாங்கிநைந்தாளே
தோய்சூல்பிரசவந் தன்னில்நொந்தாளே
துன்பத்தைத்தான்கொண்டு சுகத்தைத்தந்
தாளே பத்தினி

தலைவனுடைய மேன்மையைத் தலைவி தோழிக்குக் கூறுதல்

இராகம்-பிலகரி, திரிபுடை தாளம்

பல்லவி

நாயகர் பக்ஷமடி—எனக்கது
ஆயிரம் லக்ஷமடி நாயகர்

அநுபல்லவி

நீயறிவாயோ அவர்குணம்மானே
நாயறியுமோ ஒருசந்திப்பானை நாயகர்

சரணங்கள்

1. பத்தாவின்பக்ஷம் உள்ளாள்மகாராசி
பத்தாவின்பக்ஷம் இல்லாள்பரதேசி
வித்தாரமாகத் திரவியராசி
மென்மேலிருந்தும் பலனென்னசீச்சீ நாயகர்

2. ஏழையானாலும் எனக்கெஜமானே
என்றும்அடிமை அவருக்குநானே
கூழைஉண்டாலும் எனக்கதுதேனே
கொண்டார்இருக்கக் குறைவென்னமானே நாயகர்

3. மாலைபொன்னோலைகள் வண்ணமுத்தாரம்
மற்றநகைகளெல்லாம் பெரும்பாரம்
சீலமுங்கற்புமே தேகசிங்காரம்
திவ்யமாணிக்கத்துக் கேன் அலங்காரம் நாயகர்

4. ஆயிரந்துன்பங்கள் வந்தாலும்நானே
ஐயர்கிருபைஉண் டானால்அஞ்சேனே
பாயேர்பிடித்தவன் என்னசெய்வானே
பாணிபிடித்தவள் பாக்கியந்தானே நாயகர்

துன்பஞ்செய்தாலும் தலைவனே கதியென்று தலைவி தோழிக்குச் சொல்வது

இராகம்-சாவேரி. ஆதிதாளம்

பல்லவி

அடித்தாலும்வைதாலும் அவரேதுணையல்லால்
யார்துணையடிமானே அடி

அநுபல்லவி

மடித்தாலும்அவருடன் வாய்மதமிஞ்சலாமோ
வானத்தின்கீழிருந்து மழைஇடிக்கஞ்சலாமோ அடி

சரணங்கள்

1. குற்றங்குறைகள்கண்டால் கொண்டவர்பொறுப்பாரோ
குணமாகநாம்நடந்தால்கோபித்துவெறுப்பாரோ
இன்றைக்குச்சொல்வோரெல்லாம் என்கடன்
[இறுப்பாரோ
இழவுக்குவந்தவரெல்லாந் தாலியறுப்பாரோ அடி

2. அடிக்கும்ஒருகை அவ ரணைப்பதும்ஒருகையே
அழுதாலும்பிள்ளை அவள்பெறவேண்டும்மெய்யே
இடிக்குங்கணவருடன் எதிர்த்தால்வாழ்வதுபொய்யே
எரிகிறநெருப்பிலே இடலாமோபின்னும்நெய்யே

3. என்ன அவர்சொன்னாலும் எதிர்மொழிவிள்ளலாமோ
எரிகிற அக்கினிதன்னை இருகையால் அள்ளலாமோ
சின்னமதியாலேநம் செல்வத்தைத்தள்ளலாமோ
தின்கிறசோற்றிலே மண்போடடுக்கொள்ளலாமோ அடி

4. நன்மையாகநடந்தால் நமக்குண்டாம்அவர்நேயம்
நல்லஉத்தமிக்கெந்த நாளுந்தெய்வசகாயம்
சென்மம்உள்ளமட்டுக்குஞ் சேருமோஓர்அபாயம்
சீவனும்உடலும்போற் சேர்ந்துவாழ்வதுபாயம் அடி

5. ஆனைகட்டச்சங்கிலி தான்எடுத்துக்கொடுக்கும்
அப்படிபோலநமது வாயேநம்மைக்கெடுக்கும்
ஞாயமாகநடந்தால் நன்மைஎல்லாம்அடுக்கும்
நல்லவள்தெய்வமென்று நாடெல்லாம்கையெடுக்கும் அடி

மதயானைமேலெடுத் தெறியலாமோமண்ணுண்டை
மணவாளர்இடத்திலே வளர்க்கலாமோசண்டை
முதலாளிஇல்லாவிட்டால் மூத்தவளேநம்அண்டை
மொட்டைத்தலையிலேநாம்முடிக்கலாமோகொண்டை அடி

தலைவன் செய்த நன்மையைத் தலைவி கூறல்

இராகம்-அசாவேரி, திரிபுடை- தாளம்

பல்லவி

எத்தனை ஆனாலும்—பத்தாவைப்போல்எனக்
கிசைந்தவர் ஆரடி எத்தனை

அநுபல்லவி

வித்தாரக்கள்ளிநீ வீண்வம்புபடியாதே
ஒத்துவாழாக்குடி ஒருநாளும்விடியாதே எத்தனை

சரணங்கள்

1 மாணிக்கச்சிலைபோலப் பெண்கள்பலரிருக்க
மானே அவரையெல்லாம் விட்டாரே
மைத்துனியேசொந்தப் பத்தினியென்றென்னை
மாலையிடவுடன் பட்டாரே
காணிக்கையாகநான் புத்தியறியுமட்டும்
காத்திருந்தென்னைக்கை தொட்டாரே
கால்முதல்தலைமட்டும் பொன்காய்த்தமரம்போலக்
கனத்தநகைகளெல்லாம் இட்டாரே
ஆணிப்பொன்னே அறியேன்நான் ஒருகஷ்டம்
அத்தானல்அல்லவோ எனக்கித்தனை அதிர்ஷ்டம்
பாணிக்கிரகணஞ்செய் தவருடனே இஷ்டம்
பாராட்டினல்நமக் குண்டோஒருநஷ்டம் எத்தனை

2 தங்கக்கிண்ணியில்சோறும் வெள்ளிக்கிண்ணியில்பாலும்
சட்டம்சட்டமாக உண்டேனே
தாதியர்கால்பிடிக்க மேல்மாடியில்நல்ல
சப்பிரமத்துயில் கொண்டேனே
அங்கமாய்நான் ஏற வண்டிபல்லக்குகள்
அற்பவருத்தமும் அண்டேனே
அன்னத்துக்கில்லாமல்என்னோடொத்தபெண்கள்
அழுதும்வலியன்குத்தக் கண்டேனே

113099

மங்களமாகவே சிங்காரமனைக்கட்டு
வகைவகையாகஉடுக்க ஜெகமோகனப்பட்டு
எங்கும்பஞ்சமானாலும் எனக்குண்டோஒருதட்டு
இத்தனைபாக்கியம் எல்லாம்அவரைத்தொட்டு எத்தனை

3 கோபம்உள்ள இடத்தில் குணமும்இருக்கும்அவர்
கோபித்தோர்வார்த்தைசொல்ல லாகாதா
கொண்டவர்இடத்திலே திண்டுமிண்டுஞ்செய்தால்
கோதையேகுடிகெட்டுப் போகாதா
சோபனஞ்செய்தெனைக் காத்தவர்மேலொரு
தோஷஞ்சொன்னாலும்வாய் வேகாதா
சூரியனைக்கண்ட பனிபோல்அவர்முன்னென்
துன்பமெல்லாம்பறந் தேகாதா
ஆபத்தைத்தீர்ப்பவர் அவர்பெருநிதியடி
அடித்தாலும்வைதாலும் அவரேகதியடி
பாபபுண்ணியம் பாராதவள்மிதியடி
பாலுந்தேனும்போல் வாழ்வதுமதியடி எத்தனை

4 ஏரியைகோபித்துக் கால்கழுவாவிட்டால்
எரிக்குண்டோநஷ்டம் ஓதடி
எசமானைக்கோபித்தால் எனக்கேநஷ்டம்அல்லால்
எசமானுக்குநஷ்டம் ஏதடி
சூரியனைக்கல்லால் அடிப்பதுபோலத்
துணைவரைப்பகைத்தால் தகாதடி
துள்ளினமாடே பொதிசுமக்கும்கெட்ட
துஷ்டைகளுக்கென்றுந் தீதடி
நீருள்ளமட்டுக்கும் மீனுக்குக்கொண்டாட்டம்
நீர்வற்றினல்பின்பு நிற்குமோ மீன்கூட்டம்
பாவையர்க்குப்பத்தா வாலே ஆட்டபாட்டம்
பத்தாவுக்குப்பின்புசோற்றுக்குத்திண்டாட்டம் எத்தனை

கலைமகள் அச்சகம், காலடிப்பேட்டை, சென்னை-19.

புதிய வெளியீடுகள்

	ரூ	ந. பை
திருப்புகழ் 160-பாடல்கள்	1	25
மாயாஜாலவிநோதம்		75
பாரதியார் பாடல்கள்		60
வீட்டு வைத்தியம்		50
பட்டினத்தார் பாடல்கள்		50
சிவநாமாவளித்திரட்டு		50
தாயுமானசுவாமி பாடல்கள்		50
சர்வசமய சமரச கீர்த்தனை		50
தேவாரத்திரட்டு		50
பாம்பாட்டிசித்தர் பாடல்		25
அரிச்சந்திர விலாசம்		25
ருதுநூல்		25

மற்றும் சகலவித புத்தகமும்

கிடைக்குமிடம்:

T. R. பாலகிருஷ்ண முதலியார்

புத்தகவியாபாரம், (லக்ஷ்மி & கோ மாடியில்)

நெ-66, மலையபெருமாள் தெரு, சென்னை-1